Registered as Newspaper பக்கங்கள் 2 விசேட பதிப்பு விலை ரூபா 3-50

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 23 09-10-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 233

## 2-ம் லெப். மாலதி நினைவு நாள் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 1987 இல் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த முதற் பெண் புலி 2-ம் லெப்டினன்ட் மாலதியின் 7-ம் ஆண்டு நினைவு நாள் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இது குறித்து யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு விடுத்த செய்தியில், இந்தியாவுக்கும் எமக்குமிடையே 1987-ம் ஆண்டு கோப்பாய் வெளியில் சண்டை மூண்டபோது, நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் பெண் புலி 2-ம் லெப். மாலதியின் ஏழாம் ஆண்டு நினைவுநாள், நாளை நினைவுகூரப்படவுள்ளது. எமக்கு (6-ம் பக்கம் பார்க்க)

# ராணுவத்தினருக்கான விநியோகக் கப்பல் கடற்புலிகளின் விசேட அணியால் மூழ்கடிப்பு

## வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் மற்றுமொரு வெற்றிகரத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஆயுத தளபாடங்கள், மற்றும் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் பாரிய கப்பல் ஒன்று கடற்புலிகளின் விசேட அணியினரால் மூழ்கடிக்கப்பட்டது. இன்று அதிகாலை 3. 40 மணியளவில் இவ் வெற்றிகரத் தாக்குதல் சம்பவம் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் இடம்பெற்றது.**

கடந்த சில தினங்களாக வெற்றிலைக்கேணி-ஆனையிறவு படைத்தளங்களுக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் உட்பட உணவுப் பொருட்களையும் விநியோகிக்கும் பணியில் இக்கப்பல் ஈடுபட்டிருந்தது.

இக்கப்பல் பல ஆயிரம் தொன் எடையுள்ளதெனவும், சுமார் 300 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய கப்பல் எனவும் தெரிய வருகின்றது.

இக்கப்பலில் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் இருந்து சில கடல் மைல் தொலைவில் தரித்திருந்த போதே இன்று அதிகாலை கடற்புலிகளின் விசேட அணியினரால் மூழ்கடிக்கப்பட்டது.

## வடமராட்சி கிழக்கில் கடும் விமான குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் இன்று அதிகாலை அகோர விமானக்குண்டு வீச்சும் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உடுத்துறைப்பகுதியில் புக்காரா விமானங்கள் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

இப்பகுதியில் இன்று அதிகாலை சுற்றிச் சுழன்று திரிந்த விமானங்கள் திடீர்த்திடீர் என பேரிரைச்சலுடன் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

பொது மக்கள் குடியிருப்புகளை நோக்கியே பல குண்டுகள் ஏவப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை கட்டைக்காடு வெற்றிலைக்கேணி பகுதியில் இன்று காலை நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மக்கள் குடியிருப்புகள் மீது பல குண்டுகள் பெரும் இரைச்சலுடன் வீழ்ந்து வெடித்தன சேத விபரங்கள் அறியப்படவில்லை.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அப்பகுதியில் தொடர்ந்து பதற்ற நிலையிருந்தது,

## விமானக் குண்டுவீச்சுக்கு

...இடம்பெற்றது.

கடந்த சில தினங்களாக வெற்றிலைக்கேணி-ஆனையிறவு படைத்தளங்களுக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் உட்பட உணவுப் பொருட்களையும் விநியோகிக்கும் பணியில் இக்கப்பல் ஈடுபட்டிருந்தது.

இக்கப்பல் பல ஆயிரம் தொன் எடையுள்ளதெனவும், சுமார் 300 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய கப்பல் எனவும் தெரிய வருகின்றது.

இக்கப்பலில் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் இருந்து சில கடல் மைல் தொலைவில் தரித்திருந்த போதே இன்று அதிகாலை கடற்புலிகளின் விசேட அணியினரால் மூழ்கடிக்கப்பட்டது.

# ராணுவ தேவைக்கென வெறப்பட்ட 'ஓஷியன் ரேட்' கப்பலே மூழ்கியதாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இன்று காலை ஆனையிறவுக்கப்பால் கடற்படையினருக்கு உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தசரக்கு கப்பல் ஒன்றை தகர்த்து அதிலிருந்த ராடர் கருவிகளையும் வேறு உபகரணங்களையும் எடுத்துச் சென்றதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது. அது மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளின் கடற் புலிகள் நடத்திய இத்தாக்குதலின் போது கப்பலின் ஊழியர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டது-

ஓஷியன் ரேட் என்ற இந்த சரக்கு கப்பல் அதிலிருந்த 1209 தொன் உணவுப் பொருட்களை இராணுவ வள்ளம் ஒன்றிற்கு மாற்றுவதற்காக வெற்றிலைக்கேணி கடலில் நங்கூரமிட்டிருந்த வேளை இன்று அதிகாலை 4-30 மணியளவில் தாக்கப்பட்டது.

கடற்புலிகளின் கோஷ்டி ஒன்று நங்கூரமிட்டிருந்த கப்பலின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின் இரு பகுதிகளில் இருந்தும் வெடி குண்டுகள் கொண்டு அதனை தகர்த்தனர்- நீரில் கப்பல் மூழ்கிக் கொண்டிருந்த போது அதில் ஏறிய கடற்புலிகள் அதிலிருந்த ரேடார் சாதனத்தையும் ஏனைய உபகரணங்களையும் அகற்றிச் சென்றனர் இதன்போது அக்கப்பலில் இருந்த ஊழியர் எவருக்கும் கடற்புலிகள் எந்த தீங்கையும் இழைக்கவில்லை என பலாலியில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சிறிலங்கா வானொலி மேலும் தெரிவித்தது

ஓஷியன் ரேட் கப்பலை இராணுவத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்து செல்வதற்காக புனர்வாழ்வு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியிருந்தது

# கப்பலின் நவீன ராடரை கடற்புலிகள் கைப்பற்றினர்

படையினருக்கு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த போது கடற்புலிகளினால் இன்று மூழ்கடிக்கப்பட்ட 'ஓஷியன் ரேட்' கப்பலில் இருந்து ரேடார் கருவிகளும் தொலை தொடர்பு சாதனங்களும் கடற்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன

கப்பல் நீரில் மூழ்க ஆரம்பித்ததுமே அதில் ஏறிக்கொண்ட கடற்புலிகளின் விசேட அணியினர் அதிலிருந்த சக்தி வாய்ந்த ரேடார் கருவி மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களை கைப்பற்றிக் கொண்டு பாதுகாப்பாக திரும்பினர்

ரேடார் சாதனங்கள் மற்றும்வேறுஉபகரணங்களையும் கடற்புலிகள் கப்பலில் இருந்து அகற்றிச் சென்றுவிட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்ததாக சிறிலங்கா வானொலியும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது

## விமானங்கள் அடிக்கடி பறப்பு

இன்று அதிகாலை முதல் நண்பகல் வரை வடமராட்சி கிழக்கு பகுதிமீதான விமானங்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது ஓஷியன் ரேட் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகாலை 4 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று கடற்பரப்பை அண்டிய பகுதியில் வட்டமிட்டு நோட்டமிட்டது. கடற்பகுதியின் மேலாக அவ்ரோ விமானம் ஒன்றும் பறந்து சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

## கப்பல் மாலுமிகள் 16பேர் மீட்பு

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்த 16 ஊழியர்களும் கப்பல் மூழ்கியபோதும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு விட்டனர் என கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன-

உயிரிழப்பு ஏதும் இச்சம்பவத்தில் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

# கடற்புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் விசேட அணியினர் மேற்கொண்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில் கடற்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை

கடந்த ஓகஸ்ட் மாதத்தில், காங்கேசன்துறைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் விசேட அணியினர் மேற்கொண்ட தாக்குதலில், சிறிலங்கா கடற்படையின் வடபிராந்தியத்திற்கான கட்டளையிடும் தாய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

அத்தாக்குதலில், முதற் பெண்கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

...மேற்கொண்டனர்.

இப்பகுதியில் இன்று அதி... வெற்றிலைக்கேணி பகுதியில் இன்று காலை நிலை கொண்... தொடர்ந்து பதற்ற நிலையிருந்தது,

# விமானக் குண்டுவீச்சுக்கு சிறுமி ஒருவர் பலி

இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலின் போது சிறுமி ஒருவர் பலியானார்-

புக்காரா விமானங்கள் உடுத்துறை பகுதியில் மேற்கொண்ட தாக்குதலின் போதே இவர் கொல்லப்பட்டார்-

ஆறு வயதுடைய இந்தச் சிறுமி பற்றிய விபரங்கள் அறியப்படவில்லை

# கப்பல் மூழ்குவதை மக்கள் கரையில் நின்று பார்த்தனர்

கடற்புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட படையினரின் விநியோகக் கப்பல் கடலில் மூழ்கிக் கொண்டிருந்ததை கரையில் நின்று பெருமளவிலான மக்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

கப்பலின் பின்புறம் முதலில் நீரில் மூழ்க ஆரம்பித்ததாகவும் நண்பகலளவில் கப்பலில் முன் முனை மட்டுமே நீர் மட்டத்திற்கு வெளியே துருத்திக் கொண்டு நிற்பதை கரையில் நின்று பார்க்கக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை பேச்சுக்களை பாதிக்காது

வெற்றிலைக்கேணி கடலில் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவமானது எதிர்வரும் வியாழன் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள அரசு - புலிகள் பூர்வாங்கப் பேச்சுகளை பாதிக்கமாட்டாது என கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் கூறியதாக சிறிலங்கா வானொலி குறிப்பிட்டது.

எதிர்வரும் 13-ஆம் திகதி, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் முதற்கட்ட பேச்சுக்கள் நடைபெறவுள்ளன-

பேச்சுவார்த்தைகளிற்கு முன்பாக யுத்தநிறுத்தம் அவசியம் என விடுதலைப்புலிகள் வற்புறுத்திய போதிலும் இராணுவ நெருக்குதல் காரணமாக அரசு இக்கோரிக்கையை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது-

# மக்கள் இடம் பெயர்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுகளை தொடர்ந்து அச்சம் காரணமாக அப்பகுதியிலிருந்து பெருமளவிலான மக்கள் இன்றுகாலை இடம்பெயர்ந்தனர்.

கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு பொதுமக்கள் பாதுகாப்பான இடம் நோக்கி சென்று கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது

# அச்சம், அடக்குமுறை இல்லா சமுதாயமே நாட்டிற்கு தேவை

அச்சம், அடக்குமுறை, அவநம்பிக்கை என்பன இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காவே பாடுபட்டுவருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரும், பிரதமருமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் நாட்டின் சமூக அரசியல் துறையை ஜனநாயகப்படுத்துவது புதிய உத்வேகத்துடன் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்-

## தப்பியோடிய சிப்பாய்க்கு கொள்ளைகளுடன் தொடர்பு

இராணுவ முகாமிலிருந்து தப்பியோடிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் எம்பிலிப்பிட்டிய, வீரகெட்டிய பகுதிகளில், வீடுகளில் கொள்ளை இட்டு வந்ததுடன் பல திருட்டுச்சம்பவங்களிலும் சம்பந்தப்பட்டிருப்பதாககுறிப்பிட்டு பொலிசாரால் தேடப்பட்டு வந்தார். இவரைக் கைது செய்த பொலிசார் விசாரணைக்கு உட்படுத்திய போது சந்தேக நபர் கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி திஸ்ஸமகரகம மக்கள் வங்கியில் ஈடுவைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## காலியிலும் புதைகுழிகள் தோண்டுவதற்கு பணிப்பு

(கொழும்பு)

நாட்டில் வன்செயல்கள் உச்சம் பெற்றிருந்த காலத்தில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் புதைகுழிகள் தற்போது தோண்டப்பட்டு வருகிறது. அக்மீமன கப்பகேஸ்வொல, காபுகேன தோட்டம் ஆகியவற்றிலுள்ள புதைகுழிகளையும் தோண்டும்படி காலி மாவட்ட நீதிபதி சரத் ஜே. ஹப்பு பொலிசாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## சுதந்திர கட்சியில் மீண்டும் சேரப் போவதில்லை

- திலக் கருணாரத்னா

(கொழும்பு)

நான் ஒருபோதும் சுதந்திரக் கட்சியின் தலைமைக்குப் பின்னால் செல்லமாட்டேன். இவ்வாறு களுத்துறை மாவட்ட ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினரான திலக் கருணாரத்னா கூறியுள்ளார். களுத்துறை மாவட்ட ஐ.தே.க. கிளை உறுப்பினர்களின் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், அநுராபண்டார நாயக்கவும் மற்றும் சிலரும் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாகவதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. ஆனால் நன் கொள்கைகளுக்காக நிற்பவன். எனது கொள்கைகள் சுதந்திரக் கட்சி தலைமையினால் ஏற்கப்பட்டிருக்கவில்லை. அதனால் தான் நான் ஐ.தே.க. வுடன் இணைந்தேன். எனவே நான் மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைமைக்கு பின்னால் செல்லப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## தேர்தல் வன்செயல் நிகழ ஒருபோதும் அனுமதியோம்

### பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில், இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைப் போல், எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெறுவதற்கு எந்தக் கட்டத்திலும் அனுமதிக்கப் போவதில்லை என பொலிஸ் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையலுவலகம் விடுத்த அறிக்கையொன்றில், கடந்த பொதுத் தேர்தலில் பொலிசாரின் கட்டுப்பாடுகளையும் மீறி வன்செயல்கள் நடந்தன. அவ்வாறான நிலை இன்று இல்லை. நிலைமைகள் முற்றிலும் மாறிவிட்டன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலிஸ் தற்கொலை

(கொழும்பு)

வேலை நீக்கம் செய்யப்பட்டதால் மனமுடைந்து காணப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த சமன் (23 வயது) என்பவரே இவ்

# பொருத்தமான வேட்பாளருக்கு தேர்தலில் வாக்களிக்கவும்

### ஜனாதிபதி வேட்பாளர் ஏ. ஜே. ரணசிங்க

அச்சமும் ஊழலும் இல்லாத அமைதியான சுபீட்சமான சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு அனுபவமுள்ள ஒருவரைத் தெரிவு செய்வதற்காகப் பொருத்தமான ஒருவருக்கு வாக்களிக்கும்படி ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளரான ஏ.ஜே ரணசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் தகவல்துறை ராஜாங்க அமைச்சரான ஏ.ஜே. ரணசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்தபின்னர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு பேட்டியளித்து மேலும் கூறுகையில், பொருத்தமான ஒருவரை மக்கள் தெரிவு செய்வார்கள் எனத்தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு அறிவிக்காமல் அரசியலமைப்பை மாற்ற முயற்சிக்கப்படுகிறது எனவும், அரசியலமைப்பை மாற்ற சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் சிங்கள மகாஜன சம்யுக்த பூமிபுத்ர கட்சியின் தலைவரும், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருமான ஹரிச்சந்திரா விஜேதுங்கா தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தியும், சுபீட்சமும்தொடர்ந்து பேணப்பட வேண்டுமாஇல்லையா, இத்தேர்தல் மூலம் மக்கள் முடிவு செய்ய வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான ஹட்சன் சமரசிங்க தெரிவித்தார். அத்துடன் இரத்தக் கறைபடியாத ஒருவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்,

சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றை மீண்டும் நிலை நாட்டுவதற்கு உறுதியான அத்திவாரம் ஒன்றை வழங்குமானால் அதை ஒரு வெற்றியாகக் கருதப் போவதாக இலங்கை முற்போக்கு முன்னணியின் சார்பில் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நிகால் கலப்பதி தெரிவித்தார்.

## இரு எயர்பஸ் விமானங்கள் கொழும்பு வந்தடைந்தன

(கொழும்பு)

பிரெஞ்சு அரசிடமிருந்து அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட இரு எயர்பஸ் விமானங்கள் கடந்த வெள்ளி கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்தன

இந்த எயர்பஸ் விமானங்களை முன்னைய ஐ.தே.க அரசு கொள்வனவுசெய்ய கட்டளை அனுப்பியிருந்த போதிலும் பின்னர் புதிய அரசு இக் கொள்வனவில் பாரிய நிதிமோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதைஅறிந்துஇக்கொள்வனவை ரத்து செய்ய திட்டமிட்டது எனினும் எயர்பஸ் விமானங்களுக்கான நிதி செலுத்தப் பட்டுவிட்ட நிலையில் விமானக் கொள்வனவை நிறுத்தினால் அது பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கும் என சுட்டிக் காட்டப்பட்டதைத்தொடர்ந்து இவ் எயர்பஸ் விமானங்களை பெற்றுக்கொள்ள புதிய அரசு இணங்கியது குறிப்பிடத்தக்கது

# படையினருடன் பேச்சு நடத்தி காங்கேசன் ஆலை திறக்கப்படும்

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

பாதுகாப்பு படையினருடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு நிருமாண அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடையே பேசும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். காங்கேசன்சீமெந்து ஆலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று காங்கேசன் துறைக்கு அடுத்தவாரம் செல்லவுள்ளது. காங்கேசன் ஆலை உற்பத்தியை மீள ஆரம்பிக்கக்கூடியதாக இருப்பின் நாட்டில் நிலவும்சீமெந்து தட்டுப்பாடு தானாக நீங்கிவிடும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார், காங்கேசன் செல்லும் குழுவில் சீமெந்து கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர் தலைமையில் பொறியியலாளர்கள்தொழில் நுட்ப அதிகாரிகள், பராமரிப்பு பிரிவு அதிகாரிகள் உட்பட 10பேர் இடம் பெறுகின்றனர். இவர்கள் ஒருவாரம் ஆலையில் தங்கி நின்று சேதங்களை மதிப்பிடவுள்ளனர்.

## இலவச சீருடைத் துணி சீனாவிலிருந்து இறக்குமதி

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் ஜனவரி மாதம் முதலாம் திகதி மாணவர்களுக்கு கிடைக்கக் கூடியதான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி ...ளார்.

இதற்கான முழு விபரங்களையும் சகல பாடசாலைகளும் தந்துதவ வேண்டும் எனறும் இதற்காக சீனாவில் இருந்து சீருடைத் துணி இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்

## வி. ஓ. ஏ. நிர்மாணத்தை உடன் நிறுத்த கோரிக்கை

பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ சிலாபம் இரணவிலவில் கட்டப்படும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலி பரப்புநிலைய கட்டட நிர்மாணத்தை உடனடியாக நிறுத்துமாறும். இது தொடர்க்க திருச்சபைசார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அதிவண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவினால் விடுக்கப்பட்ட இவ்வேண்டுகோளில் சிறுசிறு

## இராணுவ தடைமுகாமில் பொலிசாரின் கெடுபிடி

[மட்டக்களப்பு]

ஏறாவூர் முதல் வாழைச்சேனை வரையிலான செங்கலடி, முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் உள்ள இராணுவ தடைமுகாம்களில் பொலிசாரும் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இப் பொலிசார் தடைமுகாமிற்கு வரும் வாகனங்களில் ஏறி படையினர் தவிர்ந்த வேறு எவரும் வாகனத்திற்குள் இருக்க வேண்டாம் சோதனை செய்யும் இடம் வரை இறங்கி நடந்து செல்லுமாறு சிங்களத்தில் கூறுகின்றனர். இறங்கி நடக்க முடியாதவர்கள் வாகனத்தில் இருப்பின் அவர்களை கட்டாயத்தின் பேரில் இறங்கி நடந்து செல்லப் பணிக்கின்றனர். இதில் வயோதிபரும், நோயாளிகளும், கர்ப்பிணிகளும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## திறந்த மனதுடன் பேச்சுக்கு செல்கிறோம்

- லயனல் பெர்னான்டோ

(கொழும்பு)

திறந்த மனதுடனேயே நாம் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் செல்கிறோம். வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுபெற்று ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் சந்திரிகா அரசு நேர்மையாக செயற்பட விரும்புகிறது என பூர்வாங்க பேச்சுகளில் கலந்து கொள்ளும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்

## பனைவள பொருட்கள் ஏற்றுமதியாக காலம் வரும்

### பொருண்மிய மேம்பாட்டு பணிப்பாளர்

எமது மூதாதையரால் பல பயன்கள் அறியப்பட்டதும், இன்னும் பல பயன்பாட்டை எமது தொழில் நுட்பம்மூலம் செயற்படுத்தக் கூடியதுமான பலவித பயன்பாடுகளைக் கொண்ட பனையை மென் மேலும் பெருக்க வேண்டியது அவசியமாகும் எனக் கடந்த 7-ம் திகதி நடைபெற்ற கற்பகச்சோலை திட்டத்திலான ஐம்பது லட்சம் பனை விதை நடுகைத் திட்டத்தின் ஓர் அங்கமான ஐம்பத்தையாயிரம் பனைவிதை நடுகையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் 2000-ம் ஆண்டளவில் தற்போதுள்ள பனைவளத்தை இரட்டிப்பாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட கற்பகச்சோலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள 5 ஆண்டுகளில் 50 லட்சம் பனை விதைகளை நாட்டும் செயற்பாடு தொடர்பாக வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளால் ஆரம்பிக்கப்பட்ட 55 ஆயிரம் பனை நடுகைத் திட்ட ஆரம்பவிழா அராலி வீதி கல்லுண்டாய் நரசிம்ம வைரவ கோவிலடி கோடிக்கணக்கான பணத்தினைப் பெறக் கூடியதான பனைவள ஏற்றுமதிப் பொருட்களை உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றும், அதற்கான மனித சக்திக்கு விஞ்ஞான அறிவு புகட்டப்பட வேண்டுமென்றும் கூறினார்.

வலிகாமம் பகுதியிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திச் சபைக் கொத்தணிகளின் இயக்குநர்கள், பொது முகாமையாளர்கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இவ்விழாவில் இப் பாரிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்த வலிகாமம் கோட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது-

---

## 2ம் லெப் மாலதி

பாதுகாப்புவழங்குவதாகசொல்லிக்கொண்டு எம் மண்ணு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில், இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைப் போல், எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெறுவதற்கு எந்தக் கட்டத்திலும் அனுமதிக்கப் போவதில்லை என பொலிஸ் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையலுவலகம் விடுத்த அறிக்கையொன்றில், கடந்த பொதுத் தேர்தலில் பொலிசாரின் கட்டுப்பாடுகளையும் மீறி வன்செயல்கள் நடந்தன. அவ்வாறான நிலை இன்று இல்லை. நிலைமைகள் முற்றிலும் மாறிவிட்டன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

...டன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு நிருமாண அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்க...

...வித்தார். காங்கேசன்சீமெந்து ஆலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான சாத்தியப் பாடுகளை ஆராய உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று காங்கேசன் துறைக்கு அடுத்தவாரம் செல்லவுள்ளது. காங்கேசன் ஆலை உற்பத்தியை மீள ஆரம்பிக்கக்கூடியதாக இருப்பின் நாட்டில் நிலவும்சீமெந்து...

...தெரிவித்தார், காங்கேசன் செல்லும் குழுவில் சீமெந்து கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர் தலைமையில் பொறியியலாளர்கள்தொழில்நுட்ப அதிகாரிகள், பராமரிப்பு பிரிவு அதிகாரிகள் உட்பட 10பேர் இடம் பெறுகின்றனர். இவர்கள் ஒருவாரம் ஆலையில் தங்கி நின்று சேதங்களை மதிப்பிடவுள்ளனர்.

...ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் 2000-ம் ஆண்டளவில் தற்போதுள்ள பனைவளத்தை இரட்டிப்பாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட கற்பகச்சோலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள 5 ஆண்டுகளில் 50 லட்சம் பனை விதைகளை நாட்டும் செயற்பாடு தொடர்பாக வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளால் ஆரம்பிக்கப்பட்ட 55 ஆயிரம் பனை நடுகைத் திட்ட ஆரம்பவிழா அராலி வீதி கல்லுண்டாய் நரசிம்ம வைரவ கோவிலடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு. சி கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் அவர்கள் எதிர்காலத்தில் பல முகாமையாளர்கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இவ்விழாவில் இப்பாரிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்த வலிகாமம் கோட்டபனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது-

## பொலிஸ் தற்கொலை

(கொழும்பு)

வேலை நீக்கம் செய்யப்பட்டதால் மனமுடைந்து காணப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த சமன் (23 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவர். கடந்த மூன்று வருடங்களாக வவுனியாப் பகுதியில் சேவையாற்றிய இவர் சட்டத்திற்கு முரணாக நடந்து வருவதாக பொலிஸ் தலைமையகத்தால் அறிவிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவரது மரணம் தொடர்பாக இரத்தினபுரி மரண விசாரணை அதிகாரி விசாரணை நடத்தினார்.

## இலவச சீருடைத் துணி சீனாவிலிருந்து இறக்குமதி

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் ஜனவரிமாதம் முதலாம் திகதி மாணவர்களுக்கு கிடைக்கக் கூடியதான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதற்கான முழு விபரங்களையும் சகல பாடசாலைகளும் தந்துதவ வேண்டும் என்றும் இதற்காக சீனாவில் இருந்து சீருடைத் துணி இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வி. ஓ. ஏ. நிர்மாணத்தை உடன் நிறுத்த கோரிக்கை

பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ சிலாபம் இரணவிலவில் கட்டப்படும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலைய கட்டட நிர்மாணத்தை உடனடியாக நிறுத்துமாறும். இது தொடர்பாக எழுந்துள்ள சகல நிலைமைகளையும் ஆராய உயர் விசாரணைக்குழு ஒன்றை அமைக்குமாறும் கத்தோலிக்க திருச்சபைசார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அதிவண நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவினால் விடுக்கப்பட்ட இவ்வேண்டுகோளில் சிறுசிறு தீர்வுகளால் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

## பன்றிமூலமான இன்சுலின் பயன்படுத்த வேண்டாம்

(கொழும்பு)

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் நோயாளருக்கு பன்றிகளிலிருந்து எடுக்கப்படும் இன்சுலின் பயன்படுத்தப்படக்கூடாது இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி றெஜி பெரேரா பணிப்புரை விடுத்துள்ளார்,

மட்டக்களப்பு மாவட்ட. ஜமாயத்துல் உலமா சுகாதார சேவைகள் அமைச்சர் ஏ. எச். எம், பௌஸிக்கு இந்தியாவிலிருந்து வரும் இன்சுலின் வகை மருந்துகள் பன்றிகளிலிருந்து எடுக்கப்படுவதை சுட்டிக்காட்டியதை தொடர்ந்து இப்பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மக்களாதரவை பெறுவதில் சந்திரிகா முன்னணி

### சந்தேசிய சேவை கணிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கான மக்களாதரவைப் பெறுவதில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவே முன்னணியில் இருப்பதாக பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்துள்ளது.

பிரதான போட்டியில் ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஈடுபட்டாலும், பொதுஜன ஐக்கிய முன்னணியே மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் முன்னணியிலிருப்பதை அறியமுடிவதாகவும், சந்தேசிய மேலும்தெரிவித்துள்ளது.

## இருநாட்களில் மின்சாரமாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உகந்த சூழ்நிலை ஏற்பட்டால் இருநாட்களினுள் மின்வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை தலைவர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

## சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் காலத்தில் மக்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அளித்த வாக்குறுதியின் பிரகாரம் வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதில் நாம் மிகுந்த உறுதியுடன் இருக்கிறோம் தீர்விற்கான முன்னோடி நடவடிக்கையை நாம ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். எம் முயற்சி வெற்றியளிக்கும் இவ்வாறு பிரதமர் சந்திரிகா அநுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

### பிரதமர் நம்பிக்கை

சிங்கள பெரும்பான்மை இனத்தவரின் உரிமைகளை நிலைநாட்டும் அதே சமயம் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குவோம் எனவும் பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

## உரவிலை குறைப்பு

(கொழும்பு)

இன்று முதல் தென்னிலங்கையில் உரவிலைகள் குறைக்கப்படுகின்றன, யூரியா உரம் 65 ரூபாவாலும் அமோனியா உரம் 75ரூபாவாலும் குறைக்கப்படுகிறது.

## 2ம் லெப் மாலதி

பாதுகாப்புவழங்குவதாகசொல்லிக்கொண்டு எம் மண்ணுக்குவந்த இந்தியஇராணுவம், எம் மக்களை அழிக்க முனைந்தது; சிறிலங்கா இராணுவம் எம் மக்களை அழிப்பதைக் கைகட்டி பார்த்துக்கொண்டு இருந்தது இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதற்காக போரை ஆரம்பித்தது.

---

# நீங்கா நினைவினில்

## இரண்டாம் ஆண்டு



மலர்வு

28- 07- 1925

உதிர்வு

10- 10- 1992

### திரு. தி. மேரி யோசேப் (செல்லத்துரை)

கண்ணிறைந்த மனையாள் கனிவான செல்வங்களை
கண்ணையிமை காப்பதுபோல் கருத்தூன்றிக் காத்து
எண்ணற்ற சேவையிலே பெருமை சேர்த்திருந்து
கண்ணிமைக்கும் வேளையிலே பரமனடி
சென்றனையோ?
இரண்டென்ன ஈராயிரம் ஆண்டுதான் சென்றாலும்
திண்ணமாய் எம் நெஞ்சில் தீபம் நீர் தெய்வமே...

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்தில் 10.10.94 காலை 6.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

இவரின் பிரிவால் துயருறும்

அச்சுநகர், மனைவி, பிள்ளைகள்,
அச்சுவேலி. மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(9621) சகோதரர்கள்.

---

# மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலம்

தமிழ்

சிங்களம்

முன் அனுபவம் உள்ளவர்களும். மொழிபெயர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் வீட்டில் இருந்தும் மொழிபெயர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

## முடிவு திகதி:- 12 - 10 - 1994

விள. இல:- 353

மே/பா. ஈழநாதம், 31 மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(9590)

---

# கண்ணீர் அஞ்சலி

தமிழீழ விடுதலைப் போரில் தம்மை இணைத்து
வீரச்சாவடைந்துள்ள
எமது பாடசாலையின் பழைய மாணவன்

### 2-ம் லெப் குலேந்திரன் / காந்தரூபன்

(செல்வராசா தவநேசன்-அண்ணன்)

அவர்கட்கு எங்களது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ் / புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன்
கில்னர் ஒழுங்கை, வித்தியாலயம்.
யாழ்ப்பாணம். (9636)

---

யாழ்- கல்வித்திணைக்களமும் (வலயம் 2)
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும்
இணைந்து நடாத்தும்

# தொழிற்திறன் அபிவிருத்தி பயிற்சிநெறி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பயிற்சி நெறி:- தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி.

இடம்:- யா/சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி.

தகைமைகள்:- 1. ஜி சி.ஈ (சாதாரணம்) பரீட்சையில் தமிழ் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
2. வயதெல்லை; 25 (ஆண், பெண் இருபாலாரும்)

★ விண்ணப்ப முடிவு திகதி:- 20- 10-1994

★ விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரங்களுடன் மேற்குறிப்பிட்ட பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(சி-10478)